**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W.1**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செந்தில்வேல் | Caste | : |
| Father's name | : திரு.சந்திரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **27.03.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மதுரை காமராஜர்புரம் வடக்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் காமராஜர் சாலையில் உள்ள மகாரஜா பாத்திரக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் மணி என்ற மணிகண்டன் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு நான் மகாராஜா பாத்திரக்கடையில் ஞாயிற்றுக்கிழமை அன்று லோடு ஏற்றும் போது, இரவு 3, 4 பேர்கள் வந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அங்கு இருந்தவர்கள் என்று கேட்டு நான் தெரியாது என்று சொன்னதற்கு என்னை தள்ளிவிட்டு அடித்தார்கள், எனக்கு தலையில் காயம், என்ன பொருளை வைத்து அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் முனிச்சாலையில் உள்ள அருண் மருத்துவமனையில் காயத்திற்கு மருந்து போட்டேன். நான் மறுநாள் காலையில் விளக்குத்தூண் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது. புகாரில் என்னை தாக்கியது யார், என்ன ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பது பற்றி சொல்லவில்லை. புகாரிலுள்ள எனது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.**1 ஆகும். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள், போலிஸ் விசாரணையில் யார் என்னை தாக்கியது என்றும் சொல்லவில்லை. மறுநாள் காலையில் என் பகுதியில் நிப்பாட்டியிருந்த வாகனம் சேதமடைந்ததாக சொன்னார்கள், அந்த வாகனங்களை யார் சேதப்படுத்தினார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையிலும், புகாரிலும் 15.05.2018 ம் தேதி இரவு 1.00 மணியளவில் எனக்கு தெரிந்த மணி என்ற மணிகண்டன் மற்றும் ஆஜர் எதிரிகள் இருவரும் லோடு இறக்கி கொண்டிருந்த லோடு மேனிடம் தகராறு செய்தார்கள் என்றும், கொஞ்ச நேரம் கழித்து ஆஜர் எதிரிகள் இருவரும் மணி என்ற மணிகண்டனுடன் இருசக்கர வாகனத்தில் வந்து, கடையை பூட்டி விட்டுவெளியே வந்த என்னை எங்கடா அந்த லோடுமேன் என்று கேட்டதாகவும், நான் தெரியவில்லை என்று சொன்னதற்கு மணி என்ற மணிகண்டன் என்னை கெட்டவார்த்தைகளால் திட்டி, அவர் கையில் வைத்திருந்த இரும்புகம்பியால் எனது தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும், ஆஜர் எதிரிகளும், மணிகண்டனும் ஒரே வாகனத்தில் திரும்பி செல்லும் போது அந்த பகுதியில் நிப்பாட்டி வைக்கப்பட்டிருந்த ஒன்பது வாகனங்களை கைகளாலும், இரும்பு கம்பியாலும் உடைத்து சேதப்படுத்தியதாகவும் என்று சொல்லியுள்ளேன் என்றும், எதிரிகளும், நானும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் புகாரில் சொல்லப்பட்ட உண்மை சம்பவங்களை மறைத்து என்னை தாக்கியது யார் என்று தெரியாது என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் மூலம்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W.2**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. தனுஷ்கோடி | Caste | : |
| Father's name | : திரு. ராஜாங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 27.03.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மதுரை சின்னக்கோனார் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக டாடா ஏஸ் சரக்கு ஏற்றும் வாகனம் பதிவெண் TN 58 AC 3543 உள்ளது. அதை பொதுவாக ஆனந்தா மெட்டல் ஸ்டோர் கடைக்கு முன்பாக நிப்பாட்டுவேன். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவில் ஆனந்தா மெட்டல் ஸ்டோர் முன்பாக நிறுத்தியிருந்த என்னுடைய சரக்கு ஏற்றும் வாகனத்தை சேதப்படுத்தியதாக சொன்னார்கள். நான் நேரடியாக பார்க்கவில்லை. வண்டியின் முகப்பு கண்ணாடி சேதமடைந்து இருந்தது. அதே இடத்தில் நிப்பாட்டி இருந்த வேறு ஆறு ஏழு வண்டிகளும் சேதம் அடைந்து இருந்தது. அந்த சம்பவத்தை யார் செய்தது என்று யாரும் சொல்லவில்லை. ஆஜர் எதிரிகளை நான் பார்த்தது கிடையாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 05.05.2018ம் தேதி இரவு 11.15 மணியளவில் நான் ஆனந்தா ஸ்டோர் முன்பாக என்னுடைய வாகனத்தை நிறுத்தி இருந்த போது, அதில் லோடு ஏற்றிக் கொண்டிருநத் லோடு மேனுக்கும், மணி என்ற மணிகண்டன் மற்றும் அவருடன் வந்த இருவருக்கும் தகராறு நடந்ததாகவும், பின்பு சிறிது நேரம் கழித்து ஆஜர் எதிரிகளும், மணிகண்டனும் இருசக்கரவாகனத்தில் வந்து சாட்சி செந்தில்வேலை எங்கடா லோடு மேன் என்று கேட்டு அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டி, இரும்பு கம்பியால் மணிகண்டன் தலையில் தாக்கினார்

என்றும், பின்னர் அதே இருசக்கரவாகனத்தில் திரும்பி செல்லும் போது, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒன்பது சரக்கு ஏற்றும் வாகனங்களை, கைகளாலும், இருமபு கம்பியாலும் சேதப்படுத்தி பிடிக்க வந்தவர்களை கொல்லாமல் விட மாட்டோம் என்று மிரட்டியதாகவும், எதிரிகள் ரவுடிகள் என்பதால் இதுகுறித்து உடனடியாக புகார் சொல்லவில்லை என்றும், பின்பு கடைக்காரர் சொன்னதால் செந்தில்வேல் புகார் கொடுத்ததாகவும், என்னை போலிசார் விசாரித்தாகவும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் அந்த பகுதியில் ரவுடிகள் என்பதால் அவர்களுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் மூலம்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W.3**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பிரகாஷ் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 27.03.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மதுரை லெட்சுமிபுரம் 4 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டு புரோக்கராக இருந்து வருகிறேன். அ.சா.1 செந்தில்வேலை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 12.00 மணியளவில் குணா மோட்டார்ஸ் ஸ்டோர் ரூம் முன்பு ஆனந்தா மெட்டல் அருகில் நான் உட்கார்ந்து கொண்டிருந்த போது, தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அதில் செந்தில் என்பவருக்கு காயம் ஏற்பட்டது. செந்திலை தாக்கியது யார் என்று எனக்கு தெரியாது. அங்கு எதிரிகள் இருந்தார்களா என்று நான் பார்க்கவில்லை. சாட்சி செந்திலை மருத்துவமனைக்கு கூட்டி சென்றுவிட்டு அதன்பின்பு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அந்த பகுதியில் வேறு வாகனங்கள் சேதமடைந்ததா என்று எனக்குதெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 05.05.2018 ம் தேதி இரவு 12.00 மணியளவில் ஆனந்தா மெட்டல் ஸ்டோர் முன்பாக லோடு ஏற்றிக் கொண்டிருந்த லோடுமேன்களுக்கும், மணி என்ற மணிகண்டன் எதிரிக்கும், அவருடன் வந்த இரண்டு நபர்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றும், சிறிது நேரம் கழித்து மணி என்ற மணிகண்டன் ஆஜர் எதிரிகள் இருவருடன் வந்து செந்தில்வேலிடம் தகராறு செய்து, அவரை மணிகண்டன் இரும்புகம்பியால் அடித்ததாகவும், கெட்டவார்த்தையால் திட்டியதாகவும், திரும்பி வாகனத்தில் செல்லும் போது அங்கு நிறுத்தியிருந்த

ஒன்பது லோடு ஏற்றும் வாகனங்களின் கண்ணாடிகளை கைகளாலும், கம்பியாலும் உடைத்து சேதப்படுத்தியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எங்கள் பகுதியில் ரவுடிகள் என்பதால் அவர்களுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் மூலம்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.